களைத் தவிர்க்க மத்திய அரசு அந்தக் காகித ஆலைகளுக்குத் தாக்கீது அனுப்பி இருக்கிறது. இந்த ஆண்டு அரசு அதற்கு நடவடிக்கை எடுக்கிறது.

### சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரை தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என பெயர் மாற்றல்.

395—(*வினா எண் 10030) திரு. மு. மாரிமுத்து மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்றம் செய்திட மத்திய அரசை வலியுறுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பெயர் மாற்றம் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

(ஆ) இதுகுறித்து அரசு, மைய அரசைக் கலந்தாலோசித்து வருகிறது.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, சென்னை மாநில அரசினுடைய பெயர் தமிழ்நாடு அரசு என்று மாற்றப்பட்டு ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. எனவே இன்னும் ஹைக்கோர்ட்டினுடைய பெயர் சென்னை உயர்நீதி மன்றம் என்றே இருக்கின்ற நிலைமையை மாற்றி, தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று மாற்றுவதற்கு அரசு மிக விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, மற்ற மாநிலங்களிலிருந்து நியமிக்கப்படுகிற உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதிகள் நியமிக்கப்படக் கூடிய மாநிலத்தின் தாய்மொழியிலே பயிற்சி பெற்றவராகத் தான் இருந்தாக வேண்டுமென்று மத்திய அரசை நமது மாநில அரசு வற்புறுத்துகிறதா? அதன்மீது மாநில அரசு எடுத்துள்ள மேல் நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரை தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்றம் செய்ய

1987 ஏப்ரல் 11]

வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் அதற்கு சில தகவல் களைக் கேட்டார்கள். அதாவது சென்னை என்று உரிமைப் பட்டயம் எப்போது பெறப்பட்டது என்றும், அதனுடைய நகல் வேண்டுமென்றும் 1985-லே கேட்டார்கள். அதையும் நாம் அனுப்பி இருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து மீண்டும் மத்திய அரசுக்கு நினைவுபடுத்தி வலியுறுத்தி இருக் கிறார்கள். மத்திய அரசும் விரைவில் இதற்கு ஏற்பு அளிக்கும் என்று நம்பப்படுகிறது. உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளைப் பொறுத்தவரைக்கும் நமது அரசினுடைய கொள்கை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கும், பாரதப் பிரதமருக்கும் எழுதி யிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி தமிழ்மொழி தெரிந்தவராகத்தான் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி மத்திய அரசை நாம் கேட்டிருக் கிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய பெயரை தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு நீண்ட நாட்களாக மத்திய அரசுக்கு வைத்து, அதன் பின்னர் இப்படி பெயர் மாற்றம் செய்வதற்கு அரசியல் சட்டத்திலே திருத்தம் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு கருதுகிறது என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு பதிலளிக்கும்போது சொன்னார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாநிலத்தின் பெயரை மாற்றுகிறபோது இந்த மன்றத்தின் தீர்மானத்தின் மூலம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தத்தை மத்திய அரசு கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தி மிக விரைவாக அது முடிந்தது. அதேபோல் சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று மாற்றுவதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி மத்திய அரசு கொண்டு வரவேண்டுமென்று வலியுறுத்துகிற வகையில் அவையிலே இந்தக் கூட்டத் தொடரிலேயே தீர்மானம் கொண்டு வந்து அரசு நிறைவேற்றுமா என்ற விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1882 ஆம் ஆண்டு "Letter of Patent"

சட்டத்தையும், 1881 ஆம் ஆண்டு "Charter Act" சட்டத்தை யும் திருத்த வேண்டி இருககிறது. மத்திய அரசு இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக் கிறது. அதன் காரணமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கோரிக்கையை அவர்கள் ஏற்று 1881 ஆம் ஆண்டு "Charter Act" உரிமைப் பட்டய சட்டத்தின் நகல் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கும் என்று நாம் நம்பு கிறோம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத் தில் ஒரு விளக்கத்தை அறிய நான் ஆசைப்படுகிறேன். நான் அறிந்தவரையில் இந்தியாவில் இருக்கிற உயர்நீதிமன்றங்கள் எல்லாம், அவை தங்கும் இடம் கருதி, அதாவது பிளேஸ் ஆப் ஸ்டேட் என்ற நிலையில் பாம்பே ஹைக்கோர்ட், கல்கத்தா ஹைக்கோர்ட் என்றெல்லாம் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாடு ஹைக்கோர்ட் என்று மாற்றுவோமே யானால் பாண்டிச்சேரி என்ற யூனியன் டெரிடரிக்கு சென்னை உயர்நீதி மன்றம்தான் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிற காரணத்தாலே பாண்டிச்சேரி பகுதியில் இருந்து எதிர்ப்பு வாராதா? அதை தமிழ்நாடு என்று மாற்றிவிட்டால் பாண்டிச்சேரி ஜூரிஸ்டிக்ஷன் நம்மை விட்டு போய்விடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, தமிழர்கள் வாழ்கின்ற பாண்டிச்சேரி பகுதியில் இருந்து அதற்கு எதிர்ப்பு வராது என்று இந்த அரசு நம்புகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் போல் சிலர் பேசுவதால் இதற்கு காலதாமதம் செய்யப்படுகிறது. லட்சத்தீவு என்ற யூனியன் டெரிடெரிக்கு கேரளாவில் ஜூரிஸ் டிக்ஷன் இருந்தாலும் கேரளா ஹைக்கோர்ட் என்ற பெயர் வைத் திருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடையூறுகளால் தாமதம் ஆகா மல் தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்றம் செய்ய விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சாக்கு போக்குகளை மத்திய அரசு சொல்லாது என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

1987 ஏப்ரல் 11]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே,

**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இக்கேள்வி நீக்கப் படுகிறது.

அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடியில் மருதுபாண்டியர் பாலிடெக்னிக்

396—(*வினா எண் 12440) திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடியில் மருது பாண்டியர் பெயரால் அரசு பாலிடெக்னிக் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய இதய தெய்வம் நம்முடைய முதல்வர் அவர்கள் 17—7—1984 ஆம் தேதியன்று சிவகங்கையில் நடைபெற்ற புதிய மாவட்ட துவக்க விழாவில் லட்சக் கணக்கான மக்கள் மத்தியில், மருது பாண்டியர் பிறந்த மண்ணான நரிக்குடியில், அவர்கள் பெயராலே அரசு பாலிடெக்னிக் ஒன்று திறக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதை ஏற்று விரைவில் மருது பாண்டியர் பிறந்த நரிக்குடி மண்ணில் இந்த ஆண்டாவது ஒரு பாலிடெக்னிக் நிறுவிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தில் ஏற்கெனவே 4 இடங்களில் காரைக்குடி, செட்டிநாடு, மானாமதுரை, சிவகங்கை போன்ற பகுதிகளில் பாலிடெக்னிக்குகள் இயங்கி வருகின்றன. நரிக்குடி பகுதியில்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.